**சுருக்கம்**

அறிவிப்புகள் – 2021 – 2022–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்புகள் – தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு உட்பட்ட 4 சரக அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (எஸ்1)த் துறை**

அரசாணை (நிலை) எண். 21

நாள் 07.03.2022
பிலவ, மாசி 23
திருவள்ளுவர் ஆண்டு 2053
படிக்கப்பட்டது :–

1. அரசாணை (நிலை) எண்.32, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள் 26.08.2014.
2. தமிழ்நாடு வக்ஃப் வாரிய முதன்மைச் செயல் அலுவலரின் கடித எண்.14468/டி3/2013, நாள் 10.11.2021.

**ஆணை:–**

2021–2022–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில் மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்களால் பின்வரும் அறிவிப்பு வெளியிடப்பட்டது:–

> "தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் வக்ஃபுகளை பாதுகாக்கவும், மீட்டெடுக்கவும் மற்றும் கண்காணிக்கவும் தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்குட்பட்ட, சொந்த அலுவலக கட்டடம் இல்லாத 8 சரக அலுவலகங்களுக்கு சொந்த கட்டடம் கட்ட 1 கோடியே 28 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கப்படும்"

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், தமிழ்நாடு வக்ஃப் வாரியம், வக்ஃப் சட்டத்தின்படி 1958 முதல் அமையப்பட்டு செயல்பட்டு வருவதாகவும், தமிழ்நாட்டிலுள்ள மாவட்டங்களை சார்ந்து தமிழ்நாடு வக்ஃப் வாரிய சரக அலுவலகங்கள் முறையே சென்னை, பூந்தமல்லி, வேலூர், கடலூர், திருச்சி, தஞ்சாவூர், மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கோயம்புத்தூர் மற்றும் சேலம் என 11 ஆக பிரிக்கப்பட்டு செயல்பட்டு

வருவதாகவும், அவற்றில் சென்னை, திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் செயல்பட்டு வரும் சரக அலுவலக கட்டடங்கள் மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் அனுமதிக்கப்பட்ட நிதியின் மூலம் கட்டப்பட்டு செயல்பட்டு வருவதாகவும், மீதமுள்ள 8 சரக அலுவலகங்கள் முறையே பூந்தமல்லி, வேலூர், கடலூர், திருச்சி, தஞ்சாவூர், மதுரை, இராமநாதபுரம் மற்றும் சேலம் ஆகியவற்றிக்கு வக்ஃப் வாரிய நிலத்தில் 83.40 சதுர மீட்டர் அளவில் சொந்த கட்டடம் கட்டுவதற்கு 28.10.2021 அன்று வாரியத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக தெரிவித்து, பொதுப்பணித் துறையிடமிருந்து பெறப்பட்ட திட்ட மதிப்பீட்டினை அரசுக்கு அனுப்பி, அறிவிப்பு செய்யப்பட்ட தொகையை விட கூடுதலாக ஏற்படும் செலவினத் தொகையினை தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் நிதியிலிருந்து வாரியத்தின் பின்னேற்பிற்குட்படுத்தி செய்து கொள்வதாக தெரிவித்து, 2021-2022-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில் அறிவிப்பு செய்யப்பட்ட தொகையான ரூ.1.28 கோடியை வழங்குமாறு தமிழ்நாடு வக்ஃப் வாரிய முதன்மைச் செயல் அலுவலர் அரசினைக் கேட்டுக் கொண்டார்.

3. தமிழ்நாடு வக்ஃப் வாரிய முதன்மைச் செயல் அலுவலரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, வாடகை கட்டடத்தில் செயல்பட்டு வரும் 8 சரக அலுவலகங்களில் நடப்பு நிதியாண்டில், முதற்கட்டமாக, அவசரமாக கட்டப்பட வேண்டிய பூந்தமல்லி, வேலூர், இராமநாதபுரம் மற்றும் கடலூர் ஆகிய 4 சரக அலுவலகங்கள் கட்டுவதற்கு நிர்வாக ஒப்புதலும், ரூ.64.00 இலட்சத்திற்கு (ரூபாய் அறுபத்து நான்கு இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பும் செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்-:

> "2250-00-ஏனைய சமூகப் பணிகள் - 800 - ஏனைய செலவு - மாநிலச் செலவினங்கள் - AD - சமய நிறுவனங்களுக்கு ஏனைய மானியங்கள் - வக்ஃப் வாரியம் - 309 - உதவித் தொகை - 01 - நடப்புச் செலவுக்கான உதவித் தொகை."
> (IFHRMS DPC 2250-00-800-AD-30901)

5. மேலே பத்தி 3-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினத்தை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.64,00,000/- 2021-2022-ஆம் ஆண்டிற்கான இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை மின்னணு முறையில்

தமிழ்நாடு வக்பு வாரிய முதன்மைச் செயல் அலுவலர் அவர்களுக்கு பெற்று வழங்கிட பிரிவு அலுவலர் (பட்டியல்), பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, தலைமைச் செயலகம், சென்னை-9 அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும், பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2021-2022-ஆம் ஆண்டிற்கான இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதித் (பி,மி.பி (ம) சி.ந) துறைக்கு அனுப்பி வைக்குமாறு சார்பு செயலாளர், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (அநமு)த் துறை, தலைமைச் செயலகம், சென்னை-9 அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. மேலே பத்தி 3-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையை விட கூடுதலாக ஏற்படும் செலவினத்தினை தமிழ்நாடு வக்ஃப் வாரியம் தனது சொந்த நிதியிலிருந்து மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறது. இதர 4 சரக அலுவலகங்கள் (திருச்சி, தஞ்சாவூர், மதுரை மற்றும் சேலம்) கட்டுவதற்கு நிதி நிலையைப் பொருத்து பின்னர் பரிசீலிக்கப்படும்.

7. இவ்வரசாணை நிதித் துறையின் அ.சா.கு எண். 9765/ நிதி (பி.மிபி)/2022, நாள் 05.03.2022-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1759 (ஆயிரத்து எழுநூற்று ஐம்பத்தி ஒன்பது).

//ஆளுநரின் ஆணைப்படி//

ஆ.கார்த்திக்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

முதன்மை செயல் அலுவலர், தமிழ்நாடு வக்ஃப் வாரியம், சென்னை – 1.
பிரிவு அலுவலர் (பட்டியல்),
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை-9.
சம்பள கணக்கு அலுவலர், தலைமைச் செயலகம், சென்னை –9.
மாநிலக் கணக்காயர் சென்னை-18/35.
மாநிலக் கணக்காயர் (தணிக்கை-I&II), சென்னை-18.

<u>நகல் :-</u>

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9.
மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.

மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை முதன்மைச் செயலாளர் அவர்களின் முதன்மைச் தனிச் செயலர் , சென்னை-9.

நிதி (வரவு – செலவு பொது I, II/பி.மி.பி)த் துறை, சென்னை – 9.

இருப்புக் கோப்பு/உபரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

7/3/2022

பிரிவு அலுவலர்

7/3/22